# Tamil Nadu Petroleum Dealers Association (Reg No 142/80)
# Management Committee and Executive Committee Election 2025

*தேர்தல் விளக்கம் (சங்க விதிகளுக்கு உட்பட்டது-(As per Bye Law of TNPDA)*

*தேர்தல் நாள்: 22/03/0205*

1. *TNPDA சங்கத்தின் விதிகளுக்கு (Bye-Law) உட்பட்டு தேர்தல் நடைமுறைகள் செயல்படுத்தப்படும்.*

   .

2. *நம்முடைய டீலர்ஷிப் தான் TNPDAவின் ஆயுட்கால உறுப்பினர் (Life Member). அந்த வகையில் விற்பனை நிலையத்தின் DPSL/ டீலர்ஷிப் அக்ரீமெண்டில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்தான் அந்த நிறுவனத்தின் சார்பில் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.*

3. *DPSL/ டீலர்ஷிப் அக்ரீமெண்டில் கையெழுத்திட்ட நபரை தவிர்த்து மனைவியின் சார்பாக கணவரோ அல்லது கணவரின் சார்பாக மனைவியோ அல்லது அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களோ அல்லது நண்பர்களோ அல்லது வேறு யாருக்கும் கடிதம் (Proxy) அளித்து அவர்கள் வந்து வாக்களிக்க இயலாது. அவ்வாறு வந்தால் தேர்தல் முடியும் வரை கூட்ட அரங்கத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்.*

4. *தேர்தலில் பங்கு பெற வரும் ஆயுட்கால உறுப்பினர் அவர்களுடைய நிறுவனத்தின் DPSL/ டீலர்ஷிப் அக்ரீமெண்டில் எந்த பக்கத்தில் அவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்தப் பக்கத்தை காண்பித்து அதோடு ஆதார் அட்டையும் காண்பித்து பின்னர் தான் அவருக்கு உள்ளே செல்ல அனுமதி வழங்கப்படும் .*

5. *தேர்தல் சமயத்தில் ஆயுட்கால உறுப்பினர்கள் ,தேர்தல் குழுவின் அனுமதி பெற்ற நபர்கள் தவிர வேறு விற்பனையாளர்கள்,மற்ற பார்வையாளர்கள் எவரும் அரங்கத்தினுள் இருக்க அனுமதி இல்லை .*

6. *ஆயுட்கால உறுப்பினர் கொண்டு வர வேண்டிய ஆவணம்:*
   *a. DPSLஅல்லது டீலர்ஷிப் அக்ரிமெண்ட் நகல்*
   *b. ஆதார் கார்டு*

7. *தேர்தல் நடைமுறைக்கான நேரம்(**10.30am**) ஆரம்பித்தவுடன் அரங்கத்தினுள் செல்ல யாருக்கும் அனுமதி கிடையாது.*

8. ***தேர்தல் நடைமுறை சம்பந்தப்பட்ட அனைத்திலும் தேர்தல் குழுவினரின் முடிவே இறுதியானது.***

*உறுப்பினர் வருகை பதிவு சமயத்தில் அனைவருக்கும் சௌகரியமாக இருக்கும் வகையில் மாவட்ட வாரியாக பிரித்து பதிவு நிகழ்வு ஏற்பாடு செய்யப்படும் .*
*உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடு நிகழ்ச்சி நிரலின்படி சரியான நேரத்திற்கு வந்து வருகை பதிவு செய்வதுடன் பொதுக்குழு கூட்டம் மற்றும் தேர்தலை சிறப்பாக நடத்தி முடித்திட தேர்தல் குழுவின் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் .*

***A.J.சூரியநாராயணா***
***தேர்தல் அலுவலர்***

# Tamil Nadu Petroleum Dealers Association (Reg No 142/80)
# Management Committee and Executive Committee Election 2025

*தேர்தல் விளக்கம் (சங்க விதிகளுக்கு உட்பட்டது-As per Bye Law of TNPDA)*

*இணைப்பு சங்கங்களுக்கான தேர்தல் விதிமுறைகள்*

1. *மாநில சங்கத்திற்கு 31/03/2024 தேதிக்கு முன்னர் முடிவடைந்த வருடம்(2023-24) வரையிலான இணைப்புத் தொகை (Affiliation fees) நிலுவை இல்லாமல் செலுத்திய இணைப்பு சங்கம் மட்டும் தான் வாக்களிக்க முடியும் .*

2. *TNPDA சங்க விதிகளில் (Bye Law) கண்டுள்ள விகிதாச்சாரப்படி வாக்குரிமை எண்ணிக்கை வழங்கப்படும்.*
3. *சந்தா தொகை செலுத்திய இணைப்பு சங்கம் சார்பாக அனைத்து பதவிகளுக்கும் வாக்களிக்க ஒரு நபர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.*

4. *இணைப்பு சங்கத்தின் சார்பாக வாக்களிக்க வரும் நபர் அந்த சங்கத் தலைவர் அல்லது செயலாளர் அனுமதி கடிதத்தை தேர்தல் நாள் அன்று தேர்தல் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவருடைய பெயர் ஆதார் அட்டையுடன் சரி பார்த்து வாக்களிக்க அனுமதிக்கப்படும் .*

*31-03-2024 தேதிக்கு முன்னர் சந்தா தொகை செலுத்திய இணைப்பு சங்கங்களின் வாக்கு எண்ணிக்கை உரிமை விபரம்*

| S.NO. | DISTRICT | VOTES |
|---|---|---|
| 1 | Salem | 4 |
| 2 | Trichy Region(8 Districts) | 16 |
| 3 | Erode | 4 |
| 4 | Tiruppur | 4 |
| 5 | Dindigul | 4 |
| 6 | Madurai | 4 |
| 7 | Ramanathapuram | 2 |
| 8 | Sivagangai | 2 |
| 9 | Karur | 3 |

***A.J.சூரியநாராயணா***
***தேர்தல் அலுவலர்***